சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

புசா. 01 திரு . சரவணன் த /பெ திரு. இராமன் , வயது 49

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

. 1. ஒன்பதாம் வகுப்பு வரை படித்துள்ளேன். பாத்திர கடை வைத்து வியாபாரம் செய்து வருகிறேன். இதற்கு முன்பு நான் ஏ எஸ் கே பெட்ரோல் பங்கில் மேலாளராக பணியாற்றி வந்தேன். ஏ எஸ் கே பெட்ரோல் பங்கின் உரிமையாளர் யார் என்றால் கார்த்திகேயன் என்பவர் உரிமையாளராக இருந்தார் அவர் இறந்த பின்பு அவரது மனைவியான இவ்வழக்கு எதிரி பூங்கொடி என்பவர் அந்த பெட்ரோல் பங்கை நடத்தி வருகிறார். ஏ எஸ் கே பெட்ரோல் பங்கில் நான் சுமார் பத்து வருடங்கள் பணியாற்றினேன். 2014 முதல் 2023 வரை அங்கு பணியாற்றினேன். நான் ஏ எஸ் கே பெட்ரோல் பங்கில் மேலாளராக வேலைக்கு சேர்ந்த சமயம் யார் அந்த பெட்ரோல் பங்கின் கணக்குகளை பராமரித்து வந்தார் என்றால் கார்த்திகேயன் தான் பராமரித்து வந்தார். கார்த்திகேயன் 2018 ஆம் வருடம் இறந்தார். கார்த்திகேயன் இறந்த பின்பு பெட்ரோல் பங்க் இன் நிர்வாகம் எதிரி பூங்கொடி கைக்கு வந்தது. எதிரி பூங்கொடி நிர்வாகம் செய்ய ஆரம்பித்ததில் இருந்து நான் அங்கு என்ன வேலை செய்து வந்தேன் என்றால் பெட்ரோல் பங்கில் விற்பனை கணக்குகளை நான் பார்த்து வந்தேன் மற்ற கணக்குகளை எதிரியே பார்த்து வந்தார். 23.07.2023 அன்று எதிரி என்னை அணுகி பணம் கேட்டார் என்ன காரணத்திற்காக பணம் கேட்டார் என்றால் என்ன காரணத்திற்கு என்று எனக்கு தெரியாது. ரூபாய் இரண்டு லட்சத்தை எதிரியின் வீட்டிற்கு சென்று அவரிடம் கொடுத்தேன். எதிரிக்கு பணத்தை ரொக்கமாக கொடுத்தேனா அல்லது காசோலை மூலமாக கொடுத்தேனா என்றால் ரொக்கமாக கொடுத்தேன். எதிரிக்கு நான் பணம் கொடுத்த போது வேறு யாரும் சாட்சிகளாக இருந்தார்களா என்றால் இல்லை நானும் எதிரி மட்டுமே இருந்தோம்.

2. நான் எதிரிக்கு வட்டிக்கு பணம் கொடுத்தேனா என்றால் ரூபாய் இரண்டு லட்சத்தை நான் நண்பரிடம் கடனுக்கு வாங்கி எதிரிக்கு கைமாற்றாக கொடுத்தேன். எதிரிடம் நான் வட்டிக்கு பணம் கொடுக்கவில்லை மாறாக என் நண்பனுக்கு தான் நான் வட்டி செலுத்தி வருகிறேன். நான் வட்டிக்கு பணம் வாங்கிய நண்பரின் பெயர் என்னவென்றால் அவர் சின்னா கவுண்டனூரை சேர்ந்த கவி ஆவார். நான் கவி என்பவரிடம் வட்டிக்கு கடன் பெற்று தான் எதிரிக்கு பணம் கொடுத்ததாக புகாரிலும் சட்ட அறிவிப்பிலும் முதல் விசாரணையிலும் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். எதிரியிடம் நான் பணம் கொடுத்ததற்கு ஆதாரமாக என்ன ஆவணம் எழுதி வாங்கினேன் என்றால் ஆவணங்கள் ஏதும் வாங்கவில்லை அதற்கு ஆதரவாக காசோலை மட்டும் கொடுத்தார். அவ்வாறு பொறுப்பு உறுதிக்காக கொடுத்த காசோலை தான் இந்த வழக்கு காசோலை என்றால் சரிதான். 23.07.2023 அன்று எதிரிக்கு நான் பணம் கொடுத்ததற்கு முன்போ, பின்போ எனக்கும் எதிரிக்கும் வேறு பரிவர்த்தனைகள் இருந்ததா என்றால் இல்லை. பணம் கொடுத்த பின்பு எதிரிடம் எப்போது பணத்தை திருப்பி கேட்டேன் என்றால் தேதி எனக்கு குறிப்பிட்டு ஞாபகம் இல்லை. ஆனால் பணம் கொடுத்து மூன்று மாதங்கள் கழித்து கேட்டேன். நான் எதிரிக்கு கொடுத்த பணத்தை எதிரி திருப்பி செலுத்திய உள்ளாரா என்றால் இன்றுவரை திருப்பி செலுத்தவில்லை. இந்த வழக்கு காசோலை எண் தெரியுமா என்றால் தெரியும் 690 ஆகும் அந்த காசோலை பாரத ஸ்டேட் வங்கியின் காசோலை ஆகும். எந்த தேதியிட்ட காசோலை கொடுத்தார் என்றால் 7.12.2023 என்று குறிப்பிட்டு கொடுத்தார். எதிரி கொடுத்த காசோலை அவரது தனிப்பட்ட வங்கிக் கணக்கில் காசோலையை அல்லது ஏ எஸ் கே பெட்ரோல் பங்க் நிறுவனத்தின் காசோலையா என்று தெரியுமா என்றால் தெரியாது. 7.12.2023 அன்று காசாசோலை நான் எனது வங்கி கணக்கில் செலுத்தினேன். நான் பாரத ஸ்டேட் வங்கி ஜோலார்பேட்டை கிளையில் வங்கி கணக்கு வைத்துள்ளேன் அந்த வங்கி கணக்கில் தான் காசோலையை தாக்கல் செய்தேன்.

3. எனக்கு கணக்கு உள்ள வங்கியும், எதிரிக்கு கணக்கு உள்ள வங்கியும் ஒரே வங்கி மற்றும் ஒரே கிளை என்றால் சரிதான். 36021908625 என்ற எண் தான் என்னுடைய வங்கிக் கணக்கு எண் என்றால் சரிதான். எதிரியின் வங்கியில் போதிய பணம் இல்லை என்று குறிப்பிட்டு காசோலை திருப்பப்பட்டது. எதிரியின் காசோலை போதிய பணம் இல்லை என்று திருப்பப்பட்ட பின்பு எதிரியை நேரில் அணுகி நான் பணம்

கேட்டேனா என்றால் இல்லை. 06.10.2024 அன்று எதிரிக்கு என் வழக்கறிஞர் மூலம் சட்ட அறிவிப்பு அனுப்பினேன். அந்த சட்ட அறிவிப்பிற்கு எதிரி தரப்பில் பதில் அறிவிப்பு அனுப்பினார்களா என்றால் இல்லை. அவ்வாறு எதிரி தரப்பினர் பதிலறிவிப்பு அனுப்பியதாக புகாரில் நான் தெரிவித்து இருந்தால் அது தவறு என்றால் சரியல்ல. 0000004080529714 என்ற எண் தான் ஏ எஸ் கே பெட்ரோல் பங்கின் வங்கி கணக்கு எண் என்றால் சரிதான். ஏ எஸ் கே பெட்ரோல் பங்கில் நான் மேலாளராக பணியாற்றி வந்ததால் அந்த வங்கி கணக்கில் உள்ள பரிவர்த்தனை விவரங்கள் எனக்கு தெரியும் என்றால் சரிதான்.

4.என்னிடம் காட்டப்படும் ஏ எஸ் கே பெட்ரோல் பங்கின் வங்கியின் 0000004080529714 என்ற வங்கிகணக்கின் 23.07.2023 முதல் 06.09.2023 வரை உள்ள கணக்கு பட்டி ஏ,எஸ் கே பெட்ரோல் பங்கின் வங்கி கணக்கின் பட்டி தான் என்றால் சரிதான். ( **அந்த வங்கி கணக்கு பட்டி கணினி பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் எ.சா.ஆ. 01 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). என்னிடம் காட்டப்படும் எ.சா.ஆ.01 வங்கி கணக்கு பட்டியில் 03.08.2023 அன்று ஏ ஏஸ் கே பெட்ரோல் பங்கில் இருந்து எனது வங்கிகணக்கிற்கு ரூபாய் 50,000 அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதே போல் 13.08.2023 ல் ரூபாய் 70,000 மும், 21.08.2023 ல் ரூபாய் 40,000 மும், 23.08.2023 ல் ரூபாய் 70,000 மும், 01.09.2023 ல் ரூபாய் 15,000 மும் ஆக மொத்தம் 03.08.2023 லிருந்து 01.09.2023 வரை ஏ எஸ்கே பெட்ரோல் பங்கில் இருந்து எனது வங்கி கணக்கிற்கு ரூபாய் 2,45,000 அனுப்பபட்டுள்ளது என்றால் சரிதான். எதிரிக்கு நான் பணம் கொடுத்ததாக கூறும் 23.07.2023 லிருந்து 01.09.2023 க்குள் எதிரி என் வங்கிகணக்கிற்கு ரூபாய். 2,45,000 அனுப்பி உள்ளார் என்றால் சரிதான்.

5. ஏ எஸ் கே பெட்ரோல் பங்கிற்கு உள்ள கணக்கு இணைக்கப்பட்டுள்ள இரண்டு சிம் கார்டுகள் கார்த்திகேயன் பயன்படுத்தி வந்தார். அவர் இறந்த பின்பு அந்த இரண்டு சிம்கார்டுகளை நான் பராமரித்து வந்தேன் என்றால் சரிதான். எதிரி என்னிடம் அந்த சிம்கார்டுகளை கொடுத்து பராமரிக்க சொன்னதால் நான் பராமரித்து வந்தேன். 9944365770 என்ற எண் தான் எனது தனிப்பட்ட செல்போன் எண் ஆகும். ஏ எஸ் கே பெட்ரோல் பங்க் பெயரில் நான் இரண்டு நடப்பு கணக்குகள் பராமரித்து வந்தேன். பொதுவாக ஏ எஸ்கே பெட்ரோல் பங்கின் காசோலைகளை எதிரி கையொப்பம் செய்து கொடுத்தால் நான் அதை வங்கியில் செலுத்தி கணக்கை பராமரித்து வந்தேன் என்றால்

சரிதான். எதிரிதான் அப்போது உரிமையாளர் என்பதால் அவர் கூறும் போது அவர் கையொப்பம் இட்டு அவ்வப்போது கொடுக்கும் காசோலைகளை நான் வங்கியில் செலுத்துவேன்.

6. நான் 2023 வருடம் செப்டம்பர் அல்லது அக்டோபர் மாதம் வேலையில் இருந்து நின்றேன். என்ன காரணத்திற்காக நான் வேலையை விட்டு நின்றேன் என்றால் எதிரிக்கு நான் கொடுத்த ரூபாய் இரண்டு லட்சத்தை அவரிடம் திருப்பி கேட்ட போது அவர் பணத்தை தர இயலாது என்று மறுத்ததால் நான் வேலையை விட்டு நின்று விட்டேன். 06.09.2023 அன்று ஊர் கவுண்டர் சக்திவேல் தலைமையில் பெட்ரோல் பங்கில் எனக்கும் எதிரிக்கும் இடையே உள்ள பரிவர்த்தனை சம்பந்தமாக பஞ்சாயத்து நடந்தது என்றால் சரிதான். அந்த பஞ்சாயத்து முடிவில் ஒரு பஞ்சாயத்து முசிலிக்கா எழுதப்பட்டது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் 06.09.2023 தேதிகிட்ட தேதியிட்ட பஞ்சாயத்து முச்சலிக்காதான் நான் அன்று எழுதிக் கொடுத்த பஞ்சாயத்து முசிலிக்கா என்றால் சரிதான். ஆனால் அந்த ஆவணத்தில் என்னை மிரட்டி கையொப்பம் பெற்று விட்டார்கள். ( **அந்த பஞ்சாயத்து முசிலிக்க அசல் எ.சா.ஆ.02 ஆக ஆட்சேபனையுடன் குறியீடுசெய்யப்படுகிறது**). என் மனைவி பெயர் தீபா. அந்த முச்சலிக்காவில் என் மனைவியும் ஊர் கவுண்டர் சக்திவேலும் சாட்சிகளாக கையொப்பம் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். ஆனால் என்னையும் என் மனைவியையும் கட்டாயப்படுத்தி கையொப்பம் பெற்று விட்டார்கள்.

07. அந்த முச்சலிக்காவில் அன்று முதல் எனக்கும் பெட்ரோல் பங்க் நிர்வாகத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றும் மேலும் நான் இரண்டு சாவிகள் மற்றும் இரண்டு சிம் கார்டுகளை ஒப்படைப்பதாகவும் குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். அதில் குறிப்பிட்டுள்ளவாறு இரண்டு சாவிகள் மற்றும் இரண்டு சிம்கார்டுகளை ஒப்படைத்து விட்டேன் ஆனால் அன்று நான் அங்கு வைத்திருந்த பணத்தை குறிப்பிடாமல் விட்டுவிட்டார்கள் பணத்தை கொடுக்கவும் இல்லை. எவ்வளவு பணம் அங்கு வைத்து விட்டு வந்தேன் என்றால் ரூபாய் 10 லட்சம் வைத்திருந்தேன். அந்த பணம் பங்குக்கு சொந்தமான பணமா என்றால் இல்லை லோடு வாங்குவதற்காக நான் வாங்கி வைத்திருந்த பணமாகும். யாரிடமிருந்து ரூபாய் பத்து லட்சம் பெற்று வைத்திருந்தேன் என்றால் ஆத்தூர் குப்பத்தை சேர்ந்த திரு சரவணன் என்பவரிடமிருந்து வாங்கி வைத்திருந்தேன். தனிப்பட்ட முறையில் நான் பணத்தை

வாங்கினேனா அல்லது ஏ எஸ் கே பெட்ரோல் பங்க் பெயரில் வாங்கினேனா என்றால் ஏ எஸ் கே பெட்ரோல் பங்கிற்காக தான் வாங்கினேன். 06.09.2023 க்கு பின்பு நான் பெட்ரோல் பங்கிற்கு செல்லவில்லை என்றால் சரிதான்.

08. அதன் பின்னிட்டு எதிரியை நான் நேரில் சந்தித்து பார்க்க வில்லை என்றால் இன்று வரை பார்க்கவில்லை. 01.04.2022 முதல் 31.03.2023 வரை பெட்ரோல் பங்க் வங்கிகணக்கில் இருந்து எனது வங்கிகணக்கிற்கு ரூபாய் 10,38,800 அனுப்பபட்டுள்ளது என்றால் சரிதான். மேலும் 01.04.2023 முதல் நான் பெட்ரோல் பங்கில் இருந்து நின்ற 06.09.2023 தேதி வரை பெட்ரோல் பங்க் வங்கி கணக்கில் இருந்து எனது வங்கிகணக்கிற்கு ரூபாய் 10,88,400 அனுப்பபட்டுள்ளது என்றால் சரிதான். அந்த பண பரிவார்த்தனைகள் அனைத்தும் ஏ எஸ் கே பெட்ரோல் பங்கில் லோடு வாங்குவதற்காக எதிரியின் தனிக்கணக்கை இணைக்க இயலாத காரணத்தால் எனது வங்கிகணக்கின் மூலம் ரோலிங்கில் பணத்தை வாங்கி கொடுத்தேன். ( **அந்த வங்கி கணக்கு பட்டியல் எ.சா.ஆ. 03,04 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.**) இந்த விவரங்கள் எனது புகாரிலோ, சட்ட அறிவிப்பிலோ முதல் விசாரணையிலோ தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். ஆனால் அனைத்து பரிவார்த்தனைகளும் எதிரிக்கு தெரிந்து தான் நடந்தது. எதிரியின் தகவல் இல்லாமல் ரூபாய். 22,00,000 பெட்ரோல் பங்க் கணக்கில் இருந்து கையாடல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பெட்ரோல் பங்க கணக்கில் நான் கையாடல் செய்ததன் காரணத்தினால் தான் பஞ்சாயத்து நடந்தது என்றாலும் எதிரியை பழிவாங்க வேண்டி பொய்யாக இவ்வழக்கு தொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிகாக ஒத்திவைக்கப்படுகிறது**

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

KODHAVADI SUBRAMANIAN DINESH

Judicial Magistrate No.I
Digitally signed by KODHAVADI SUBRAMANIAN DINESH
Location: Tirupathur

Judicial Magistrate No.1,
Tirupathur.